# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.187/2019

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் நெடுஞ்செழியன் வா.சா.–1

த/பெ. சுப்பிரமணியன்

கிராமம் தொழில் வியாபாரம்

தாலுகா அருப்புக்கோட்டை வயது 74

---

முதல் விசாரணை 24–11–2025.

நான் இந்த வழக்கின் 1ம்வாதி. 2ம்வாதியும் நானும் 1ம் பிரதிவாதி சங்கத்தில் உறுப்பினராக உள்ளோம். வாதிகள் தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக 2ம் வாதிக்கும் சேர்த்து தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 04.05.1999ம் தேதிய தாவா 1வது சங்கத்தின் யாதாஸ்து சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 07.09.1959ம் தேதிய தாவா 2வது சங்கத்தின் விதிகள் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 03.10.2018ம் தேதிய தாவா 1வது சங்கத்தின் உறுப்பினர்கள் பட்டியல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 01.10.2018 ம் தேதிய தாவா 2 வது சங்கத்தின் உறுப்பினர்கள் பட்டியல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 06.08.2019 ம் தேதிய வாதிகள் வழக்கறிஞர் மூலம் 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 06.08.2019 ம் தேதிய வாதிகள் வழக்கறிஞர் மூலம் 2 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) அஞ்சல் ஒப்புதல் அட்டை வரிசை எண்ணம் 6 அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 16.08.2019 ம் தேதிய 1 ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 16.08.2019 ம் தேதிய 2 ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 02.03.2019 ம் தேதிய 1 ம் வாதி செலுத்திய வர்த்தகர் சங்க மகமை ரசீது (சந்தா) அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 08.03.2019 ம் தேதிய 1 ம் வாதி செலுத்திய வர்த்தகர் சங்க மகமை ரசீது (சந்தா) அசல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S